FREE EDITION

April - 2017



# ஜோதி

# Jothi Spiritual Newsletter

ஜோதி 11 : சுடர் 02 - 122

## ஆன்மிகச் செய்திச்சுடர்

### மூல மந்திரம்

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!
*

**சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு**

**வாழ்த்துக்கள்**

**14.04.2017**

மேல்மருவத்தூர் அன்னையின் அருள்வாக்கு

**தியானம்:**

**தொண்டு:**

**தருமம்:**

“எத்தனை விஞ்ஞானம் வளர்ந்தென்ன?

எத்தனை பெரியவர்களிடம் போனால்தான் என்ன?

எத்தனை ஆலயம் சுற்றினால்தான் என்ன?

எத்தனை நல்ல காரியம் செய்தால் தான் என்ன?

துன்பம் என்று வரும்போது கோயிற்சிலை உடனே கை கொடுத்துக் காப்பாற்றி விடுவதில்லை.

அவற்றுக்குப் பதிலாகத் தியானம், தொண்டு, தருமம் இவற்றை மேற்கொண்டு வாழ்வது சிறப்பு. இவை சிறந்த பலன் தரும்.

## சமயங் கடந்த சக்தி!

### ஒரே தாய் - ஒரே குலம்!

மேல்மருவத்தூர் அன்னை ஆதிபராசக்தி சாதி கடந்தவள். இனங்கடந்தவள், மதங்கடந்தவள். மனிதர்கள்தான் சாதி, சமய, இனத்தின் பெயரால் சண்டை போட்டுக் கொள்கிறார்கள். ஒரே மதத்தினர் கூட சாதி வேறுபாடு கற்பித்துக்கொண்டு ஒரு சாதியினரும் அதே மதத்தைச் சேர்ந்த மற்றொரு சாதியினரும் தங்களுக்குள் தாக்கிக்கொண்டு மடிகின்றனர். இந்தியாவில் சாதி சமயப் பாகுபாடும் வெளிநாடுகளில் இனப் பாகுபாடும் மனித இனத்துக்கு ஒரு சவாலாக விளங்கி வருகிறது. இப்படிப்பட்ட உலகில் ஒரே தாய் - ஒரே குலம் என்று அன்னை நமக்குச் சொல்லிக் கொடுத்த கோட்பாடுதான் மனிதர்களைக் காப்பாற்ற முடியும். ஒரே தாய் ஒரே குலம் என்ற கோட்பாட்டை அன்னை தற்சமயம் நிகழ்த்திக் காட்டிக் கொண்டிருப்பதை ஒரு சிறுமியின் வாயிலாகச் சில நாட்களுக்கு முன் தெரிந்து இறும்பூது எய்தினேன். அதை இங்கு எழுதுகிறேன்.

டாக்டர் சி.ஏ.முத்துக்கிருஷ்ணன், .M.A.B.O.L., Ph.D.
கோவை

### ‘மன்றம் துவக்கி நடத்து’

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திலே பட்டிவீரன்பட்டி என்ற ஊரில் உள்ள ஆதிபராசக்தி மன்றம் மாவட்டத்திலேயே சிறந்த மன்றங்களில் ஒன்றாகும். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு சக்தி ஜெயச்சந்திரன் என்பவரின் தந்தையாரின் உயிரை அம்மா காத்துக்கொடுத்து இதய நோயால் பாதிக்கப்பட்ட அவருக்கு மறுபடி இதய நோய் வராமல் காப்பாற்றி வருகிறாள். ‘மன்றம் துவக்கி நடத்து! உன் தந்தையை நான் காப்பாற்றுகிறேன்!’ என்று சக்தி ஜெயச்சந்திரனிடம் அன்னை அருள்வாக்கில் கூறினாள். அன்னை இட்ட கட்டளைப்படி பட்டிவீரன்பட்டியில் மன்றம் ஆரம்பித்து நடத்தி வருகிறார்கள். அன்னையிடம் வந்து, அன்னையின் அருளால் தாங்கள் குணமாகிவிட்டதும் சிலர் அந்தச் சம்பவத்தையும் அன்னையின் வார வழிபாட்டு மன்றத்தையும் மறந்து விடுகின்றனர். ஆனால் ஜெயச்சந்திரன் குடும்பத்தினர் அப்படிப்பட்டவர்களல்லர். சில நாட்களுக்கு முன்பு கூட ஜெயச்சந்திரனின் தந்தையார் “இதய நோயிலிருந்து என்னைக் காப்பாற்றினாள் ஆதிபராசக்தி. என் உயிர் உள்ளவரை அவள் தொண்டுகளைச் செய்வேன். அவளுக்காக உழைப்பேன்!” என்று உறுதியுடன் கூறினார். அதைப் போலவே அந்தக் குடும்பத்தில் அனைவரும் அன்னையின் தொண்டையும் அன்னையிடம் கொண்ட பக்தியையும் தங்கள் இரு கண்களாகப் போற்றி செய்து வருகிறார்கள்.

### தொழில் நல வேள்வி

அந்தக் குடும்பத்தினர் பட்டிவீரன்பட்டியில் கடந்த 11.4.95 அன்று தங்களது இரண்டாவது புதிய தொழிலகத்தைத் துவக்கத் தொழில் நலவேள்வி செய்தனர்.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

அன்னையின் அருள்வாக்கு:

**“ஆன்மிகத் துறையில் கிடைக்கும் அமைதி வேறு எந்தத் துறையிலும் கிடைக்காது”**

## "ஜோதி"

- ஆன்மிக செய்திச்சுடர்

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான 'சக்தி ஒளி' மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப் படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினுடாக "ஜோதி" ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

**Search by: "Jothi Newsletter"**

## செய்திச்சுடரில்...


**சமயங் கடந்த சக்தி**
Page: 1 – 4

**யாக சாலையின் பெருமை**
Page: 9 – 13, 15-16

**UPCOMING EVENTS**
Melbourne: 4, 13, 14
Sydney: 8, 9

**திருமதி அம்மா பதில்கள்**
பக்கம்: 14

**அருள்வாக்கும் அனுபவங்களும்...**
பக்கம்: 7, 8

**Divine Miracles**
Page: 8

**சித்தர்பீட விழாக்கள்**
பக்கம்: 15

**ஆன்மிக நாட்குறிப்பு**
பக்கம்: 16


# சமயங் கடந்த சக்தி....

(1ஆம் பக்க தொடர்ச்சி)

திண்டுக்கல் மாவட்டத்தில் வேள்விக் குழுவினர் சிறப்பாகச் செய்த அந்த வேள்விக்கு நானும் சென்றிருந்தேன். வேள்வி துவங்கும்போது விநாயகர் கலசத்தில் உட்கார்ந்து அர்ச்சனை செய்ய ஒரு சிறுமியை அனுப்பினர். "இது யார்?" என்றேன். "என் தங்கச்சி மகள்தான்"என்றார் ஜெயச்சந்திரன். "அம்மா அங்கு விளையாடியிருக்கிறாள். வேள்வி முடிந்ததும் கேட்டுக் கொள்ளுங்கள்"என்றார்.

### நல்ல ஆன்மிகச் சூழ்நிலை

வேள்வி முடிந்ததும் அந்தச் சிறுமியை அழைத்து "அம்மா உன்னிடம் என்னம்மா விளையாடினாள்?"என்று கேட்டேன். அந்தப் பெண்ணின் பெயர் கிருத்திகா. மதுரையில் உள்ள செயின்ட் ஜோசப் கான்வெண்டில் ஒன்பதாம் வகுப்பில் படித்து வருகிறாள். அவளுடைய தந்தையார் மதுரைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். ஜெயச்சந்திரனின் தங்கையர் மூவருக்கும் திருமணமாகிவிட்டது. கணவன் வீடு சென்ற அந்த மூவருமே அன்னை ஆதிபராசக்தியிடம் அளவிறந்த பக்தி உடையவர்களாக இருக்கிறார்கள். எனவே கிருத்திகாவின் தாத்தாவும், பாட்டியும், மாமா ஜெயச்சந்திரனும், அத்தைமார்களும், தாயாரும் அன்னை ஆதிபராசக்தியிடம் மாறாத பக்தி கொண்டிருந்ததால் அச்சிறுமிக்கு நல்லதொரு ஆன்மிகச் சூழ்நிலை அமைந்திருந்தது.

### ஓய்வு கிடைத்தால் மந்திரம் படிப்பாள்

சிறுமி கிருத்திகா சொன்ன விபரங்களைக் கீழே தருகிறேன். கிருத்தியாவுக்குப் பள்ளிக்கூடத்தில் பாடம் நடைபெறாத ஓய்வு நேரங்கள் வருவதுண்டு. ஆசிரியைகள் விடுப்பு எடுத்தபோது அவர்கள் பாடம் நடத்த வேண்டிய வகுப்பு மாணவிகளுக்கு ஓய்வு கிடைக்கும். விளையாட்டு வகுப்புகள் வரும்போது விளையாட விருப்பம் உள்ளவர்கள் விளையாடுவார்கள். விருப்பம் இல்லாதவர்கள் தோட்டத்திலும் மரத்தடியிலும் உட்கார்ந்து கொண்டிருப்பார்கள். இப்படி கிருத்திகாவுக்குப் பல முறை ஓய்வு கிடைப்பதுண்டு. அப்போதெல்லாம் கிருத்திகா தன்னிடம் இருக்கும் மந்திர நூலை எடுத்து மந்திரங்களைப் படித்துக் கொண்டிருப்பாள்.

### நீயும் படி

ஓய்வு நேரத்திலெல்லாம் வகுப்பிலும் தோட்டத்திலும் ஏதோ ஒரு புத்தகத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதையும் அவள் வாய் "ஓம்..ஓம்.." என்று முணுமுணுத்துக்கொண்டிருப்பதையும் வகுப்பில் உள்ள மற்ற மாணவிகள் கவனித்தனர். நமக்குப் புரியாத ஏதோ ஒரு புத்தகத்தை வைத்துக்கொண்டு ஏதோ உளறிக் கொண்டிருக்கிறார்கள் என அவர்கள் ஒதுங்கிப் போய் விடுவார்கள். கிருத்திகாவினுடைய நெருங்கிய தோழிகளான லதா, அம்ரிம் என்ற இருவரும் நீ என்ன புத்தகம் படிக்கிறாய்? ஒரு டீச்சர் போய் அடுத்த டீச்சர் வருவதற்குள் கூட அதை எடுத்துப் படிக்கிறாயே! அப்படி என்ன புத்தகம் அது?"என்று கேட்டார்கள். கிருத்திகா தன்னிடம் உள்ள மந்திர நூலை எடுத்துக் காட்டினாள். "இது ஒரு சாமி புத்தகம். மேல்மருவத்தூர் என்ற இடத்தில் இருக்கும் ஆதிபராசக்தியின் மந்திரங்கள் இதில் இருக்கின்றன. அந்தச்சாமி எனக்கு ரொம்பப் பிடிக்கும். அதனால் எனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் அந்தச் சாமியின் புத்தகத்தை மெதுவாகப் படித்துக் கொண்டிருப்பேன்"என்றாள்.

(தொடர்ச்சி...3ஆம் பக்கம்)

# சமயங் கடந்த சக்தி....

(2ஆம் பக்க தொடர்ச்சி)

“இதை நான் படிக்கலாமா?” என்றாள் அம்ரிம். “யார் வேண்டுமானாலும் படிக்கலாம். நீயும் படி. இந்தச் சாமியை நீயும் நினை!”என்றாள் கிருத்திகா.

## ஜோதி ஒளியுடன் ஆசி

அம்ரிம் இஸ்லாம் சமயத்தைச் சேர்ந்த பெண். அம்ரிம்மின் தந்தையார் மலேசியாவில் இருக்கிறார். அம்ரிம் இங்கு ஹாஸ்டலில் தங்கிப் படிக்கிறாள். மந்திர நூலைப் படித்த சில நாட்களில் அம்ரிம் கிருத்திகாவிடம் “இரவில் நான் தூங்கும்போது எனக்குப் பிரகாசமான ஒளி தெரிகிறது. அந்த ஒளிக்கு நடுவில் ஒருவர் நின்று கொண்டிருக்கிறார். அவர் என்னைக் கனிவுடன் பார்த்துத் தன் கையால் ஆசி வழங்குகிறார். அவரை இதற்கு முன் நான் பார்த்ததில்லை. அவர் யார் என்றும் எனக்குத் தெரியவில்லை!”என்று கூறினாள். கிருத்திகாவுக்கு அம்ரிம் கண்ட கனவு பற்றி ஏதும் விளக்கம் கூறத் தெரியவில்லை. கனவு என்பது ஒரு முறைதானே வரும்? ஒளியுடன் கூடிய அந்த மனிதர் பல இரவுகளில் அம்ரிமின் கனவில் வந்து காட்சி கொடுத்து ஆசி வழங்குவது கிருத்திகாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

## இவர்தான் இவர்தான்!

சக்தி ஒளி தபாலில் தன் வீட்டுக்கு வந்ததும் கிருத்திகா பள்ளிக்கூடத்துக்கு எடுத்துச் சென்று அதையும் அங்கு படிப்பது உண்டு. அந்த வழக்கத்தில் ஒரு நாள் சக்தி ஒளி புத்தகத்தை வகுப்புக்கு எடுத்துச் சென்று ஆசிரியை வகுப்பில் இல்லாதபோது அதைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது அம்ரிம் “இவர்தான்..இவர்தான்..!”என்று கூவிக்கொண்டு கிருத்திகா உட்கார்ந்திருக்கும் இடத்துக்கு ஓடி வந்தாள். கிருத்திகா கையில் இருந்த சக்தி புத்தகத்தைப் படக்கென்று கையில் வாங்கிக் கொண்டாள். அந்தச் சக்தி ஒளியின் அட்டையில் அருள்திரு அடிகளார் அவர்களின் திருவுருவப்படம் அழகாக அச்சிடப்பட்டிருந்தது. “இவர்தான் என் கனவில் அடிக்கடி வருகிறார். முதலில் ஒரு பேரொளி வரும். பின் அதன் நடுவில் இவர் நின்று தன் கையைத் தூக்கி எனக்கு ஆசி வழங்குகிறார் என்று சொன்னேன் அல்லவா? அவர் இவர்தான்!”என்றாள் அம்ரிம். சக்தி ஒளியைக் கையில் வைத்துக்கொண்டு அருள்திரு அடிகளார் அவர்களின் திருவுருவத்தையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள். “இவர்தான் மேல்மருவத்தூர் கோவிலில் உள்ள அடிகளார்”என்று கிருத்திகா எல்லா விபரங்களையும் அம்ரிமுக்குத் தெளிவாகக் கூறினாள்.

## லதாவின் ஆச்சரியம்

கிருத்திகா மேல்மருவத்தூர் கோவிலைப் பற்றியும் அங்கு கோவில் கொண்டிருக்கும் ஆதிபராசக்தியைப் பற்றியும் தன் தோழி லதாவுக்கும் அடிக்கடி எடுத்துக் கூறியிருக்கிறாள். சக்தி ஒளி புத்தகத்தின் அட்டைப்படத்தில் அச்சிடப்பட்டிருக்கும் இந்த அடிகளார்தான் மேல்மருவத்தூரில் இருக்கிறார்கள் என்றும் அவர்தான் அம்ரிமின் கனவில் அடிக்கடி வந்து ஆசி வழங்குகிறார்கள் என்பதை எல்லாம் தற்போது தெரிந்துகொண்டதும் லதாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

## இரத்த வாந்தி

லதாவுக்கு ஒரு பிரச்சினை. ஒரு நாளைக்கு 2, 3 முறை இரத்த வாந்தி வரும். பல டாக்டர்களிடம் பார்த்தும் இரத்த வாந்தி நிற்கவில்லை. நாளுக்கு நாள் உடல் நலிந்து கொண்டே வந்தது. இந்த நிலையில்தான் கிருத்திகா மேல்மருவத்தூர் அன்னையின் அருளையும் பெருமைகளையும் லதாவுக்கு எடுத்துக் கூறினாள். “இந்த சாமியை வேண்டிக்கொள். மந்திரம்படி. உனக்கு நோய் குணமாகும்” என்று கிருத்திகா சொன்னாள். லதாவும் அப்படியே பின்பற்றினாள். மந்திர நூலைப் படித்தாள். அன்னையை வழிபட்டுத் தீர்த்தமும் வேப்பிலையும் சாப்பிட்டாள். அதன்பிறகு லதாவுக்கு 3 முறை வரும் இரத்த வாந்தி ஒரு நாளைக்கு இரண்டு முறை ஆகியது. தற்போது ஒரு முறையாக ஆகியுள்ளது. முன் இருந்ததை விட லதாவின் உடல் தேறியிருக்கிறது.

## சக்தி நெறி பரப்புதல்

மன்றத்துக்குச் செல்லுவதற்கும் வழிபாடு செய்வதற்கும் நேரமில்லை. ஓய்வில்லை என்று சொல்பவர்கள் உண்டு. ஆனால் பள்ளியில் படித்துக்கொண்டிருக்கும் கிருத்திகாவோ தனக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் அன்னையை நெஞ்சில் நினைத்தாள். மந்திரம் படித்தாள். சக்தி ஒளி படித்தாள். தான் ஆன்மிகத்தில் திளைத்தது மட்டுமில்லாமல் தன் தோழியர் அம்ரிம், லதா இருவருக்கும் ஆன்மிகச் சுவையைக் காட்டினாள். உலகெங்கும் சக்தி நெறி ஓங்க வேண்டும் என்ற கோட்பாட்டிற்கேற்ப சிறுமியாக இருந்தாலும் கிருத்திகா இரு தோழிகளிடம் சக்தி நெறி பரப்பினாள்.

## அருமருந்து

ஒரு நாளைக்கு மூன்று முறை இரத்த வாந்தி எடுத்த லதா உடல்நலம் பெற்று வருகிறாள். அன்னையின் நாமமும், தீர்த்தமும், வேப்பிலையும் அரிய மருந்தாக ஆகித் தீர்க்க முடியாத நோய்களை எல்லாம் தீர்ப்பது இன்று மருவத்தூர் அன்னையின் ஆன்மிகத்தில் சாதாரண நடைமுறையாகிவிட்டது.

(தொடர்ச்சி..4ஆம் பக்கம்)

# Melbourne - Mandrams – Upcoming Events – April 2017

## Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram
## மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்
(Reg. No. 2193)
விக்டோரியா – அவுஸ்திரேலியா

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - E-mail: melbourne.mandram@gmail.com
Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194 - Facebook : : https://www.facebook.com/MM2193

**கூட்டு வழிபாடுகள்:**

**Clarinda – வெள்ளி - Friday:**
**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**
**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

| | | | | |
|---|---|---|---|---|
| Dandenong - 02.04.2017 | Sunday | பங்குனி | 19 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 07.04.2017 | Friday | பங்குனி | 24 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 09.04.2017 | Sunday | பங்குனி | 26 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 14.04.2017 | Friday | சித்திரை | 01 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 16.04.2017 | Sunday | சித்திரை | 03 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 21.04.2017 | Friday | சித்திரை | 08 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 23.04.2017 | Sunday | சித்திரை | 10 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 28.04.2017 | Friday | சித்திரை | 15 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 30.04.2017 | Sunday | சித்திரை | 17 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |

26.04.2017 – ஞாயிறு - அமாவாசை, 10.04.2017 – திங்கள் - அமாவாசை

## சமயங் கடந்த சக்தி....
(3ஆம் பக்க தொடர்ச்சி)

**சமயம் கடந்த சக்தி**

அம்ரிம் இஸ்லாம் சமயத்தைச் சேர்ந்தவள். மருவத்தூர் ஆதிபராசக்தியைப் பற்றி அவளுக்கு ஏதும் தெரியாது. அடிகளாரைப் பார்த்ததும் கேள்விப்பட்டதும்கூட இல்லை. அப்படியிருந்தும் அந்தச் சிறுமிக்கு அடிகளார் காட்சி கொடுத்தது ஏன்? மன்ற வழிபாட்டில் கலந்துகொண்டு மருவத்தூருக்குச் சென்று அன்னையை வணங்கி அடிகளாரைத் தரிசித்து வரும் பக்தர்களுக்குக்கூடக் கிட்டாத அற்புதக் காட்சி அம்ரிமுக்கு எப்படிக் கிட்டியது? தைப்பூசத்தில் ஏற்றப்படும் மருவத்தூர் ஜோதியும் பக்தர்களால் பல நெடுந்தூரத்திலிருந்து எடுத்து வரப்படும் ஆன்மிக ஜோதியும் அன்னையின் அருள் ஜோதி ஆகும் அல்லவா இந்த இரு ஜோதிகளையும் வெளிப்படுத்தும் ஒளிவெள்ளத்தின் நடுவிலிருந்து அருள்திரு அடிகளார் அவர்கள் அம்ரிமுக்கு ஆசி வழங்கினார்களே அது ஏன்? அதுதான் அன்னை ஆதிபராசக்தி. **அனைவருக்கும் பொதுவானவள் என்பதை உணர்த்த! உலக உயிர்க்கெல்லாம் அவள் ஒரே தாய் என்பதை உணர்த்த! அம்ரிம் இஸ்லாமியப் பெண்ணாக இருக்கலாம். ஆனால் ஆதிபராசக்தி சமயம் கடந்த சக்தி என்பதை உணர்த்த அம்ரிமின் இந்தக் கனவில் வாயிலாக அடிகளார் வேறு அன்னை வேறு அல்ல! அவள்தான் இவர் என்ற நுட்பமும் அங்கு விளங்குவதை நுட்பமாகச் சிந்திப்பவர் உணரலாம்.**
ஓம் சக்தி!

## அமாவாசை – பௌர்ணமி விளக்குப்பூசை பலன்கள்

**பங்குனி – அமாவாசை–பௌர்ணமி :** தரும சிந்தனையை உண்டுபண்ணும்.
உலகில் எங்கும் சமாதானமும், செழிப்பும், தர்ம நெறிகளும் தழைத்து உலக நலம் உண்டாகும்.

**சித்திரை - அமாவாசை–பௌர்ணமி:** தானியம் உண்டாகும்..
தானியங்கள் மிகுதியாக விளையும்.

# நாளை காலை உனக்கு வேலை

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், சேத்துப்பட்டு கிராம ஆதிதிராவிடர் வகுப்பைச் சோ்ந்த நான் M.Sc., வரை படித்து வேலை கிடைக்காமல் அலைந்து திரிந்து வாழும் நான் பெரியாரின் கொள்கைகளை மனதில் சுமந்த ஒரு தொண்டன்.

வேலையில்லாத் திண்டாட்டம், கையில் காசில்லா நிலை, அடுக்கடுக்கான கஷ்டங்களின் உச்சமாகத் தற்கொலைக்கு முயற்சிக்கும் தருவாயில் ஆசிரியராகப் பணி புரியும் எனது நண்பர் சக்தி சீனுவாசனிடம் எனது வருத்தத்தைப் பகிர்ந்து கொண்டதில் அவரோ, “மேல்மருவத்தூர் போய் அம்மாவைத் தரிசனம் செய்து வேண்டிக்கொள் அங்கு சென்றும் பயன் இல்லை எனில் உன் விருப்பப்படி செய்” என்று கூறினார்.

நானும் மேல்மருவத்தூர் சென்று அம்மாவை வணங்கி அங்கவலம் வந்து ஊர் திரும்பினேன். பின் ஸ்ரீ முஷ்ணம் பொது மன்றத்தில் அடிக்கடி வழிபாட்டில் கலந்து கொண்டேன். ஒருமுறை கருவறைத் தொண்டு செய்ய மேல்மருவத்தூர் சென்று ஊர் வந்ததும் முதல் திருப்புமுனையாக எனக்கு கேரளாவில் கொச்சியில் மத்திய அரசு அலுவலகத்திலிருந்து நேர்காணல் கடிதம் வரப்பெற்றேன். உடனே மீண்டும் மருவத்தூர் வந்து அம்மாவிடம் ஆசிபெற்று அங்கிருந்து பேருந்தில் நேர்காணலுக்குப் பயணம் செய்தேன். இரவு சுமார் 12.00 மணியளவில் தூக்கத்தில் அம்மா அவர்கள் குங்குமப் பொட்டு நீளவாக்கில் வைத்த ஒரு முகத்தைக் காட்டினார்கள்.

**சக்தி அலெக்சாண்டர்**
தேத்தாம்பட்டு, கடலூர்

மறுநாள் கொச்சி சென்று நேர்காணல் நடைபெறும் இடம் செல்லும் முன் 108 மந்திரங்களைச் சொல்லியபடி சென்றேன். என்னுடன் 18 நபர்கள் MLA., MP., அரசியல்வாதிகளின் சிபாரிசுகளோடு வர அம்மாவே கதி என எண்ணியபடி இருந்தேன். என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டதும் நான் அந்த அறைக்குள் நுழைந்ததும் என்ன ஆச்சரியம்? அம்மா யாரை எனது கனவில் காட்டினாளோ அவர் நெற்றியில் குங்குமக் கோடுடன் காணப்பட்ட அவர் நேர்காணல் போஸ்டில் நடுவில் அமர்ந்திருந்தார்.

அந்தக் குங்குமக்காரர் என்னிடம் கேள்விகள் கேட்க எனக்குத் தெரிந்த பதிலைத் தந்தேன். பின்னர் கொச்சியிலிருந்து மீண்டும் மேல்மருவத்தூர் வந்து 3 நாட்கள் தங்கி ஊர் வந்து சேர்ந்தேன். அன்றிரவு உறக்கத்தின் கனவில் அம்மா அவர்கள் “மகனே! நாளை காலை 11.0 மணிக்கு உனக்கு ஆணை (Order) வாங்கிக்கொள் என்றாள். நானும் அயர்ந்து தூங்கினேன். யாரோ என் பெயரை அழைக்க உடனே விழிக்க நேரம் பார்த்தால் மணி 11.00. திரும்பிப் பார்க்கிறேன். தபால்காரர். என் வேலைக்கான உத்தரவை வாங்கினேன். உடல் லேசாகி மனம் மருவூராளை நினைத்தது.

ஆலயம் சென்று, நேர்காணலில் கலந்து வேலைக்கான உத்தரவு வந்தது 3 மாதத்தில். நல்ல வேலையைக் கொடுத்து விரும்பிய பெண்ணை மணந்து வாழ வழி வகுத்தாள் குங்குமக்காரி மருவூர் அரசி.

ஓம் சக்தி!


## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

சக்தி ஒளி

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

| தனி இதழ் | ஆண்டுச்சந்தா | ஆயுள் சந்தா | வெளிநாட்டுச் சந்தா |
|---|---|---|---|
| ரூபா ₹ 15.00 | ரூபா ₹ 180.00 (இந்தியா) | ரூபா ₹ 2600.00 (இந்தியா) | இந்திய ரூபா ₹ 3500.00 (இரண்டு ஆண்டுகள்) |

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **“ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை”** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**Address: Editor,‘Sakthi Oli’ Office, Adhiparasakthi Sithar Peetam, Melmaruvathur 603319, Tamil Nadu, South India.**

ஆன்மிககுரு

அருள்திரு அடிகளார் அருளிய

# குரு உபதேசங்கள்



**செவ்வாடை தொண்டர்கட்கு...**

“வேள்விக்குழு! பிரச்சாரக்குழு! இளைஞர் அணி! மூன்றும் சூலத்தின் மூன்று கிளைகள் போன்றவை அதனைத் தாங்குகிற தாங்கிதான் நம் அம்மா! நம்மைத் தாங்கி நிற்பது அம்மாதான் என்பதை மறந்துவிடக்கூடாது.

நம் தொண்டர்கள் ஒரு குடும்பம் மாதிரி, ஆன்மிகத்தில் இணைந்து தொண்டுகள் செய்து வர வேண்டும். தகப்பனும் பிள்ளையும் ஒருவரை ஒருவர் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். பிரச்சாரக்குழு தகப்பன் மாதிரி! இளைஞர் அணி பிள்ளை மாதிரி! அத்தகைய உறவு நம்மிடம் இருக்க வேண்டும். முதியவர்களிடம் அனுபவம் மிகுதி! எடுத்துச்செய்யும் ஆற்றல் இளைஞர்களிடம் மிகுதி! தகப்பனிடம் வாழ்க்கை அனுபவங்கள் உண்டு. மகனுக்கோ காரியமாற்றும் பலம் உண்டு. இரண்டும் ஒன்றாக இணைந்தால்தான் குடும்ப உறவு பலப்படும். நம் ஆன்மிக இயக்கத்திலும் அத்தகைய பரஸ்பர உறவு அமைய வேண்டும்.

நீங்களெல்லாம் நன்றாக இருக்க வேண்டும். உங்கள் பிள்ளை குட்டிகளெல்லாம் நன்றாக இருக்க வேண்டும். உங்கள் குடும்பமெல்லாம் நன்றாக இருக்க வேண்டும்.

உங்கள் மனசு சுத்தமாக இருக்க வேண்டும். உங்கள் உள் மனமும் சுத்தமாக இருக்க வேண்டும்.

நீங்களும் உங்கள் குடும்பமும் நன்றாக இருந்தால்தான் ஆலயமும் நன்றாக இருக்கும். ஆலயம் நன்றாக இருந்தால் தான் இயற்கையும் நன்றாக இருக்கும். இயற்கை நன்றாக இருந்தால்தான் பஞ்ச பூதமும் நன்றாக இருக்கும். பஞ்ச பூதங்கள் நல்லவனா கெட்டவனா என்று பார்ப்பதில்லை அம்மாவும் அது மாதிரிதான். பஞ்ச பூதங்கள் எல்லோர்க்கும் பொது!

ஒரு கழுதையைத் தலைவனாக அம்மா நியமித்தாலும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். கழுதை என்றால் அலட்சியமாக எண்ணி விடாதீர்கள். உடும்புப்பிடி! குரங்குப்பிடி! என்றெல்லம் சொல்வார்கள். உடும்பு பிடித்த பிடியை விடாது. இடி இடித்தால் கூட அது பிடித்த பிடியை விடாது. ஆனால் கழுதை கத்தும் குரல் கேட்டால் உடும்பும் தன் பிடியை விட்டுவிடும்! கழுதைக்கு அவ்வளவு சக்தி! அது கடித்தாலும் தாங்க முடியாது. உதைத்தாலும் தாங்க முடியாது.

பறவைகள் கலர் கலராக இருந்தாலும் அவற்றின் எலும்புக்கூடுகள் வெள்ளையாகத்தான் இருக்கின்றன. வெளிப்பார்வைக்கு நீங்கள் வேறு வேறாக இருந்தாலும், உங்கள் உள்ளமெல்லாம் வெள்ளையாக இருக்க வேண்டும்.

இனி ஊரில் மழை பெய்யவில்லை என்றால் அதற்குச் செவ்வாடைத் தொண்டர்கள் தான் பொறுப்பு. ஊரும் உலகமும் சுபீட்சம் பெற, அம்மா மன்றங்களைக் கொடுத்திருக்கிறது. மந்திரங்களைக் கொடுத்திருக்கிறது. வேள்வி வழிபாட்டு முறைகளையெல்லாம் சொல்லிக் கொடுத்திருக்கிறது. இவற்றையெல்லாம் பயன்படுத்தி மழை பெய்ய வைப்பதும் கிராமங்களை சுபீட்சம் பெற வைப்பதும் நம் செவ்வாடைத் தொண்டர்கள் கையில்தான் இருக்கிறது”.

- 18.06.1994 அன்று பெரியார் மாவட்டத்தில் ஆன்மிகப் பயணம் நிறைவடைந்த நாளன்று தொண்டர்களுக்குக் கூறியவை இவை!

## ஆசையும் ஆன்மாவும்

**“ஆன்மாதான் ஆசையை அழிக்க வேண்டும். ஆனால் இப்பொழுது ஆசை ஆன்மாவை அழிக்கிறது. ஆன்மா உள்ளவரை கடமை இருந்துகொண்டுதான் இருக்கும், கஷ்டமும் இருந்துகொண்டுதான் இருக்கும்.”**

- **அன்னையின் அருள்வாக்கு**

# அருள்வாக்கும் அனுபவங்களும்

## வாகனத்தை விற்றுவிடு

அன்னையின் ஆலயக் கருவறையில் இப்போதுள்ள விக்கிரகம், அவளது அருள்வாக்கு ஆணைப்படி மகாபலிபுரத்தில் வடிக்கப்பட்டது. அதனைச் செய்த சிற்பி திரு.கணபதி ஸ்பதி. அந்தச்சிலை வடிவமைத்த பிறகு, அதனை எடுத்து வருவதற்காக மூன்று பேரை நியமித்தாள் அன்னை. அவர்களுள் செங்கற்பட்டு வழக்கறிஞர் ஒருவர். அவரது காரில் அன்னையின் சிலை கொண்டுவரப்பட்டது.

சில மாதங்கள் கழித்து, அந்த நபரை அழைத்து அன்னை “மகனே! நீ வைத்திருக்கும் வாகனத்தை விற்றுவிடு”என்று ஆணையிட்டாள்.

என்ன காரணத்திற்காக அம்மா விற்கச் சொல்கிறது என்பது அவருக்குப் புரியவில்லை.

அன்னையின் விக்கிரகம் எடுத்து வந்த கார் அது! இது ராசியான வண்டி! பெரிய பாக்கியம் செய்த வண்டி! அப்படியிருக்க இதைப்போய் எப்படி விற்பது? என்று குழம்பினார். அதை விற்க அவருக்கு மனம் வரவில்லை.

சில மாதங்கள் கழித்து, மதுராந்தகத்தில் நடக்கிற ஒரு வழக்கு சம்பந்தமாக செங்கற்பட்டிலிருந்து காரில் வந்துகொண்டிருந்தார். கருங்குழி அருகே வந்தபோது, எதிரேயொரு லாரி முரட்டுத்தனமான வேகத்தோடு வந்தது.

தானே அன்று காரை ஓட்டிக்கொண்டு வந்தார். லாரி மோதிவிடப்போகிறதே என்று வேகமாக வண்டியைத் திருப்பும்போது… திரும்பிய வேகத்தில் அவரது கார் சாலையை விட்டு இறங்கி அருகே இருந்த மரத்தில் மோதிவிட்டது. வண்டியின் கதவுகள் திறந்துகொண்டன. யாரோ இவரைக் கையைப் பிடித்து வெளியே இழுத்துப் போட்டது போல ஒரு உணர்வு. அவர் உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை. என்றாலும் முழங்கால் எலும்பு உடைந்துவிட்டது. அப்படியே மயங்கிய நிலையில் கிடந்தார். இவ்வளவும் பட்டப்பகலில் நடந்த நிகழ்ச்சிகள்.

அங்கே அடுத்து வந்த பஸ்ஸில் இருந்த சிலர், வண்டியின் நிலையையும், விபத்தையும் பார்த்து, பஸ்ஸை நிறுத்தச் சொன்னார்கள். இது செங்கற்பட்டு வக்கீல் வண்டி போல இருக்கிறதே! என்று எண்ணி ஓடி வந்தார்கள். உடனே மருத்துவமனையில் கொண்டு சேர்த்தார்கள்.

எலும்பு முறிவு ஏற்பட்டுவிட்டதால் புத்தூருக்குப் போவதே உசிதம் என்று கருதிப் புத்தூர் சென்று கட்டுப்போட்டார்கள்.

இனி நம்மால் பழையபடி நடக்க முடியுமா? எழுந்து உலாவ முடியுமா? நம் கதி இப்படியாகிவிட்டதே..? என்ற கவலைகள் அவரை அரிக்கத் தொடங்கின.

முதல் கட்டு போடப்பட்டது. பின் இரண்டாம் கட்டும் போடப்பட்டது. “இன்னும் 10 நாட்கள் இந்தக் கட்டை அவிழ்க்கக்கூடாது. எச்சரிக்கையாக இருங்கள். அதன்பிறகு வாருங்கள் என்று புத்தூர் வைத்தியர் சொல்லியனுப்பிவிட்டார்.

வீட்டிற்கு வந்தார். சிலமணி நேரம் ஓய்வெடுத்தார். வேறொரு காரை அமர்த்தி வரச் சொன்னார். மேல்மருவத்தூர் புறப்பட வேண்டும் என்று சொல்லிப் புறப்பட்டுவிட்டார். வழியில் அன்னையை நினைத்து அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அழுகையும் வந்தது.

அன்று அவர் வரும் வேளையில், புற்றுமண்டபத்தில் அருள்வாக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

நாலுகால் மண்டபத்தில் இவர் காலடியெடுத்து வைத்ததுமே.. அந்தக் கால்கட்டு தானாக அவிழ்த்துக்கொண்டு விழுந்தது. அதைச் சரிப்படுத்திக் கட்டிக்கொண்டு அருள்வாக்கு கேட்கப் போனார்.

அம்மா சில மணித்துளிகள் மௌனமாக இருந்தாள். அம்மாவைப் பார்த்தவுடன் ஓவென்று அழவேண்டும் என்று தோன்றியது. சிரமப்பட்டு அடக்கிக்கொண்டார். கண்களில் மாலை மாலையாகக் கண்ணீர். அவர் அழுது முடியட்டும் என்று அம்மாவும் இருந்தாள் போலும். ஓரளவு மனம் தேறி அம்மாவை நிமிர்ந்து பார்த்தார்.

அம்மா சொல்லத் தொடங்கினாள். “மகனே! வாகனத்தை விற்றுவிடு! விற்றுவிடு1 என்று பலமுறை சொன்னேன். கேட்கவில்லை. குழந்தைக்கு மருந்து புகட்ட வேண்டும் என்று தாய் முயற்சிக்கிறாள். குழந்தையோ அடம் பிடிக்கிறது. எப்படியாவது மருந்தை ஊட்டியே ஆகவேண்டும். அந்நிலையில் உண்மையான தாய் என்ன செய்வாள் தெரியுமா மகனே!?” என்று அவரைப் பார்த்து அம்மா கேட்டாள்.

“குழந்தையை அடித்தாவது மருந்து ஊட்டுவாள்”என்றார் அவர்.

“அடித்ததும் குழந்தை அழுமல்லவா? அப்படி அழும்போது வாயைத் திறக்குமல்லவா? அந்த நேரம் பார்த்து மருந்தை ஊட்டிவிடுகிறாள் அல்லவா?”என்றாள் அம்மா!

“ஆமாம்மா..”என்றார் அவர்.

“அதையேதான் நானும் உனக்கு செய்தேனடா!”என்றாள் அம்மா.

(8ஆம் பக்க தொடர்ச்சி)

# Sydney - Mandrams - Upcoming Events – April 2017



**Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW Mandram (Australia)**

Contact: 02-96420519, 0439686452



**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School
Moree Street – Westmead

| | | | |
|---|---|---|---|
| 07.04.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 10.04.2017 | MONDAY– திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்கும் பூஜை” |
| 14.04.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 21.04.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 28.04.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## அருள்வாக்கும் அனுபவங்களும்...

(7ஆம் பக்க தொடர்ச்சி)

அவரால் மேற்கொண்டு பேச இயலவில்லை. “சரி அம்மா”என்று எழுந்து வெளியே வந்துவிட்டார்.

அம்மா அவ்வப்போது சொல்வது உண்டு. “நல்லது கிடைத்தால் அம்மா தயவு என்கிறீர்கள். கஷ்டம் வரும்போதும் அம்மா கொடுத்தது! அம்மா கொடுக்கும் மருந்து இது! என்று கருதிப் பொறுத்துக் கொள்ள வேண்டும். துன்பத்தையும் அம்மா தருவதாக நினைத்துக் கொண்டு பொறுத்துக்கொள்ளும் மனப்பக்குவம் உங்களுக்கு வரவேண்டும்”என்பாள்.

செங்கற்பட்டு வழக்கறிஞர் அனுபவம் நமக்கும் ஒரு பாடம்.

ஓம் சக்தி!

## Divine Miracles at Melmaruvathur

### Sivam! Savam! Panam! Pinam!

A man from Andhra Pradesh who also knew Tamil came to Maruvathur for divine revelation. He went and sat in front of Mother. He had a sheet containing 42 questions in his pocket! He went on asking them and Mother also went on answering him. In spite of getting answers to so many questions there was no indication on his face that he was in any way happy.

Finally when Mother told him something his face showed great happiness. It appeared that he had a long-standing property dispute. There was a document, which would have favoured him, but its whereabouts were not known. Mother had told him that She would locate it for him. She asked him to keep her picture or idol in his room for worship. He replied that he was an ardent devotee of Lord Siva and asked how then he could keep her picture in his Pooja room. Mother said, “In the word Sivam there is a ‘hook’(matra) over the letter ‘Sa’. If you remove it what will happen?”He replied that it would become ‘Savam’, which stand for a dead body!” She then asked, “In the word ‘Panam’(money) if you add that hook what will happen?” He replied, “It will become ‘Pinam’(which is again dead body in Tamil)”


Mother said, “Even that small hook or matra over a letter has so much power to change the meaning from Sivam to Savam I am the one who has given energy to Siva Himself! What stops you from worshipping me?”

***

# Sydney - Mandrams - Upcoming Events – April 2017



**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்**
**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**
Contact: 02-97643872, 0416217317



**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**
Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140

| | | | |
|---|---|---|---|
| 07.04.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 10.04.2017 | MONDAY– திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja "பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 14.04.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 21.04.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 28.04.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## யாகசாலையின் பெருமை

கேரள மாநிலத்தில் சித்தூர் என்ற ஊர் இருக்கிறது. கோவையிலிருந்து 35 அல்லது 40 மீட்டர் தூரத்தில் அது அமைந்துள்ளது. அங்கு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் துவக்கப்பட்டுச் சிறந்த முறையில் வழிபாடு நடைபெற்று வருகிறது.

### விழாவும் வேள்வியும்:

அந்த மன்றத்தில் அன்னையின் அருளால் விழாவும் வேள்வியும் வைத்தனர். கேரள மாநிலப் பிரச்சாரக் குழுத் தலைவராக அன்னையால் பொறுப்பு அருளப்பட்ட சக்தி பி.கே.சுந்தரம் அவர்களையும், என்னையும், புலவர் சுப்பிரமணியம் அவர்களையும் அவ்விழாவில் சொற்பொழிவாற்ற மன்றத்தினர் அழைத்திருந்தனர். அத்துடன் அம்மன்றத்தில் நடைபெற இருந்த வேள்விகளையும் என்னை நடத்திக்கொடுக்கும்படி மன்றத்தினர் கேட்டுக்கொண்டனர். அன்னையை வேண்டிக்கொண்டு வேள்விப் பொறுப்புகளையும் நான் ஏற்றுக் கொண்டேன்.

### சித்தூர் புறப்பாடு:

வெளியூர் மன்றங்களில் சிறப்புச் சொற்பொழிவு இருந்தால் மன்றத்தில் பேசவேண்டிய நேரத்துக்கு அங்கு போய்ச் சேருவேன். ஆனால் காலையில் வேள்வி செய்ய வேண்டியிருந்ததால் முதல் நாள் மாலையிலேயே அங்கு போய்ச் சேர்ந்து இரவே வேள்விப்பணி செய்வதுதான் வழக்கம்.

சித்தூரில் 25.09.1988 ஞாயிறு காலை மன்ற வேள்வியும், அது முடிந்ததும் எனக்குச் சொற்பொழிவும் இருந்தன. அதனால் 24.09.1988 சனிக்கிழமை மதியம் சித்தூருக்குப் புறப்படத் தயார் ஆனேன்.

**டாக்டர் சி.ஏ.முத்துக்கிருஷ்ணன்,** M.A., B.O.L. Ph.D.
கோவை

கோவையிலிருந்து மருதராஜ் என்ற தொண்டரை என்னுடன் சித்தூருக்கு அழைத்துச் செல்ல முடிவு செய்தேன். நாங்கள் இருவரும் சித்தூருக்குப் புறப்படும் சமயம் நீலகிரி மாவட்டப் பிரச்சாரக்குழுத் தலைவர் சக்தி இராமமூர்த்தி என்னைப் பார்ப்பதற்காக என் இல்லத்துக்கு வந்தார். சித்தூரில் ஒரு மன்ற வேள்வி இருக்கிறது. நீங்கள் வருகிறீர்களா? என்று கேட்டேன். அவரும் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டு என்னுடன் சித்தூருக்குப் புறப்பட்டுவிட்டார்.

### மன்றம் பற்றி விசாரிப்பு:

நாங்கள் மூவரும் 24.09.1988 சனிக்கிழமை மாலை 6.30மணியளவில் சித்தூர் போய்ச் சேர்ந்தோம். மன்றத் தலைவி சக்தி பரமேஸ்வரி அவர்கள் முகவரியை விசாரித்துக் கேட்டு அவர்கள் இல்லத்துக்குச் சென்றோம்.

மன்றத்துக்குச் செல்வதற்கு முன்பாக மன்றத் தலைவியிடம் மன்றம் இருக்கும் இடம் பற்றியும் மன்றத்துக்குப் பக்தர்கள் வரும் எண்ணிக்கை பற்றியும் கேட்டேன்.

### மன்றம் வரப் பயப்படும் மகளிர்:

"மன்றத்துக்கு இருபது முதல் முப்பது பேர் வரை வழிபாட்டுக்கு வருகிறார்கள். மகளிர்தான் அதிகம் வருகிறார்கள். ஆடவர் ஒரு சிலரே வருகிறார்கள்"என்று மன்றத் தலைவி கூறினார்.

(தொடர்ச்சி..10ஆம் பக்கம்)

## யாகசாலையின் பெருமை...

“மன்றம் எங்கு இருக்கிறது?”என்று கேட்டேன். “மன்றம் ஊருக்கு ஓரத்தில் குடியிருப்பு வீடுகளிலிருந்து தள்ளித் தனியாக இருக்கும் ஒரு கோயிலில் இருக்கிறது. அது ஒரு அம்மன் கோயில். அதில் பல ஆண்டுகளாகப் பூசை இல்லை. கோயிலுக்குரிய குடும்பத்தார் மட்டும் முக்கிய நாட்களில் சென்று பகலில் தீபாரதனை காட்டி வருவர். இரவு நேரத்தில் அந்தக் கோயில் பக்கமாக யாரும் போக மாட்டார்கள். அப்படிப் போனவர்களுக்குத் தீய சக்திகளால் உயிர் போகும் அபாயம்கூட நிகழ்ந்துள்ளது. எனவே மன்ற வழிபாட்டுக்கு மகளிர் வரப் பயப்படுகிறார்கள். அதனால் மாலை 5.00 மணிக்கே வழிபாடு துவக்கி 6.30 மணிக்கு முடித்துவிட்டுச் சீக்கிரமாக வீட்டுக்குச் சென்று விடுவோம்”என்றார்.

### மந்திர ஒலி மகிமை

ஆகம முறைப்படி கட்டப்பட்டு, கோபுரமும், கோபுர கலசமும், ஸ்தல விருட்சமும் கொண்ட கோயில்களில் ஒரு மாமாங்கத்துக்கு (12 வருடம் வரை) தெய்வ சக்தி தங்கியிருக்கும். ஒரு மாமாங்கத்துக்குள் கும்பாபிடேகம் செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் அந்த நாளிலிருந்து மேலும் 12 ஆண்டுகளுக்கு அக்கோயிலில் சாந்நித்தியம் விளங்கும். இல்லையேல் அங்கே தெய்வ சாந்நித்தியம் இருக்காது.

மந்திர ஒலிகள் ஒலிக்கத் தீய சக்திகள் நீங்குவதுடன் அக்கோயில் சிலையில் தெய்வ சக்தி பெருகிறது.

“நீங்கள் மன்றம் துவங்கிக் கடந்த ஆறு மாதங்களாக வழிபாட்டில் அன்னையின் மந்திரங்களைப் படித்து வருவதால் அங்கே தீய சக்திகள் இருந்தால் ஓடி விடும். மேலும் நாளைக் காலை வேள்வி செய்யப்போவதால் இனிமேல் எந்தப் பயமும் கிடையாது. ஆகவே மகளிர் எந்த நேரத்திலும் கோவிலில் உள்ள மன்றத்துக்கு வரலாம்”என்று மன்றத் தலைவியிடம் விரிவாகக் கூறினேன்.

### வயல் கரையில் இருந்த கோயில்:

இ.ரவு 7.00 மணி ஆயிற்று. மன்றம் அமைந்துள்ள அக்கோயிலுக்கு தலைவியுடன் நாங்கள் மூவரும் சென்றோம்.

அங்கே முப்பது மகளிர் சக்திகள் மன்றத்தில் பணி செய்து கொண்டிருந்தனர். அது ஒரு அம்மன் கோயில். வழக்கறிஞர் ஒருவர் குடும்பத்துக்குச் சொந்தமானது. அந்த வழக்கறிஞரின் துணைவியார் மன்றத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவராக இருந்தார்.

அக்கோயிலுக்கு முன்னே அழகாகப் பந்தல் அமைத்திருந்தனர். கோவிலைச் சுற்றிலும் மூன்று பக்கங்களிலும் பசுமையான நெல்வயல்கள், கேரளாவின் செழுமையும் அழகும் கோவிலைச் சுற்றிக் குடிகொண்டிருந்தன.

### துணையிருக்கிறோம்:

மறுநாள் விழாவிற்கான பணிகளையும், அன்னதானத்துக்குச் சமையல் செய்ய வேண்டிய இடம் தேர்ந்தெடுத்து அது சம்பந்தமான பணிகளையும் மகளிர் பார்த்துக்கொண்டிருந்தனர்.

இரவு 10.30 மணி ஆகிவிட்டது. அந்த மன்றத் தலைவியும் சக்திகளும் கூட்டமாக வந்தனர். தலைவியம்மா மற்ற மகளிர் சக்திகளிடம் சொன்னார்.

“நம்ம பணியெல்லாம் முடிந்துவிட்டது. இவர்கள் மூவரும் இரவு முழுவதும் வேள்விப்பணி செய்யப் போகிறார்கள். பாவம்! இவர்களுக்குத் துணை வேண்டாமா..? நாம் எல்லோரும் சேர்ந்து இவர்களுக்குத் துணையிருப்போம்”என்றார்கள்.

“எங்களுக்குத் துணை எதுக்குங்க?”என்றேன்.

“இந்தக் கோயிலிலே இரவு நேரத்தில் நீங்கள் மூவர் மட்டும் எப்படி இருப்பீர்கள்? நாங்கள் இருவரோ மூவரோ உங்களுடன் இருந்தாலும் எங்களுக்கும் பயமாக இருக்கும். அதனால்தான் நாங்கள் எல்லோருமே இங்கேயே இருக்கிறோம்”என்று கூறினார்.

### அம்மாதான் துணையிருக்கிறாளே...

நாங்கள் மூவரும் ஆண்கள். முப்பதுக்கும்மேற்பட்ட மகளிர் எங்களுக்குத் துணையிருப்பதாகச் சொன்னது எனக்கு வெட்கமாக இருந்தது.

எங்களுக்குத் துணை வேண்டாம், இதோ! அம்மாதான் துணையிருக்கிறாளே!”என்று மன்றத்தில் உள்ள அன்னையின் படத்தை ஏறிட்டு நோக்கினேன்.

“அப்படியென்றால்.. நீங்கள் மூவரும் இங்கே இருந்து கொள்வீர்களா..?” - என்று வியப்புடன் கேட்டுக்கொண்டே எல்லா மகளிரும் வேகவேகமாகக் கோயிலை விட்டு வெளியேறிவிட்டனர்.

### பக்கத் துணையாகப் பராசக்தி:

உள்ளூர்க்காரர்கள் பலரும் எங்களுடன் கூட இருக்கப் பயந்த அந்தக் கோயிலிலே நாங்கள் மூவரும் தனியாக விடப்பட்டோம். எங்களுக்குப் பயம் சிறிதும் இல்லை. ஆனால்.. நிசப்தமான அந்த இரவு, சுற்றிலும் வயல்வெளி, தவளைகளின் சப்தங்கள், காட்டுப் பூச்சிகளின் கிரீச் சப்தங்கள், அந்த நிசப்தத்தைக் குலைத்தன. தூரத்தில் பெரும் பூதங்களாக ஓங்கி நிற்கும் மரங்கள் - எல்லாவற்றிற்கும் மேலாக அன்று மாலையிலிருந்து உள்ளூர் சக்திகள் அந்த இடத்தைப் பற்றிச் சொன்ன கருத்துக்களும் சேர்ந்து எங்களுக்கு வித்தியாசமான மனநிலையைக் கொடுத்தது. என்றாலும் பக்கத் துணையாகப் பராசக்தி இருக்கிறாள் என்ற தைரியத்தில் வேள்விப் பணிகளைச் செய்துகொண்டிருந்தோம்.

### குலை நடுக்கம் ஏற்பட்டது:

இரவு மணி 1.30 இருக்கும் அந்தக் கோவிலில் அம்மன் கருவறைக்கு முன்பு அமர்ந்து நாங்கள் மூவரும் பணியாற்றிக் கொண்டிருந்தோம்.

(தொடர்ச்சி..11ஆம் பக்கம்)

# யாகசாலையின் பெருமை...

மலர்கள் சுற்றிக்கொண்டு வரப் பயன்பட்ட ஓலைப்பாய் எடுத்து எதிரில் அமர்ந்து நீலகிரி மாவட்டப் பிரச்சாரக் குழுத் தலைவர் சக்தி. இராமமூர்த்தி தேங்காய்களுக்கு மஞ்சள் தடவிப் பொட்டு வைத்துக்கொண்டிருந்தார். நான் கலசத்துக்கு நூல் சுற்றிக் கொண்டிருந்தேன். சக்தி. மருதராஜ் அந்தக் கலசத்துக்கு மஞ்சள் மற்றும் குங்குமப் பொட்டுக்களை வைத்துக்கொண்டிருந்தார். பொட்டுக்களை வைத்து முடித்து விட்டதால் ஒரு கலசத்தை எடுத்து நூல் சுற்றப் பழகிக் கொண்டிருந்தார். நேரம் ஆக ஆக இருவரும் சோர்ந்து போய்விட்டனர். இராமமூர்த்தி தான் அமர்ந்திருந்த ஓலைப் பாயிலேயே படுத்துக் கண்ணயர்ந்துவிட்டார்.

சக்தி மருதராஜைப் பார்த்தேன். சுவரில் சாய்ந்தபடி அவரும் தூங்கிவிட்டார். எனக்கு இலேசான சிரிப்பு வந்தது. அவர்களை எழுப்ப விரும்பவில்லை. எனக்கோ சிறிதும் தூக்கம் வரவில்லை.

எத்தனையோ இடங்களில் இரவு முழுவதும் கண் விழித்து வேள்விப்பணி முடித்துவிட்டு, பேண்ட், சட்டை மாற்றிக்கொண்டு நேரே கல்லூரி சென்று பகல் முழுவதும் வகுப்பு எடுப்பது உண்டு.

அன்னை எனக்கு அருள்வாக்கில் தந்த கட்டளையால் எனக்கு அவ்வாறு இயங்க முடிந்தது.

நான் அன்று சிறிதும் அயராமல் கலசத்துக்கு நூல் சுற்றிக் கொண்டிருந்தேன்.

திடீரென்று அம்மன் சிலைக்கு மேலே.. மேற்கட்டடத்தில் இரவின் அமைதியைக் கிழித்துக்கொண்டு படபட, படபட, டமடம, டமடம என்று பயங்கரமான சப்தம் கேட்டது.

யாரது? என்று தலையை நிமிர்த்திப் பெரிய சப்தத்துடன் அம்மன் சிலைக்கு நேர்மேலே பார்த்தேன். பயத்தால் என் குலை நடுங்கியது.

### மீண்டும் பயங்கர ஒலிகள்:

யாரது..? என்று நான் பெருங்குரல் கொடுத்ததும் அம்மன் சிலைக்கு மேலே கேட்ட படபட சத்தம் நின்றுவிட்டது. நான் மறுபடியும் கலசத்திற்கு நூல் சுற்றத் தொடங்கினேன்.

ஐந்து நிமிடம் கழித்து, மீண்டும் கருவறைக்கு மேலே பயங்கரமான சப்தம் கேட்டது.

“யாரது..? மேலேயிருந்து சப்தம் செய்வது? யாரு? யாரங்கே இருப்பது?”என்று உரக்கச் சப்தம் போட்டேன். நான் வாய் திறந்த உடனே தலைக்கு மேலே கேட்ட சப்தம் நின்றுவிட்டது.

கலசத்தையும் நூலையும் ஒரு வாழையிலைமேல் வைத்துவிட்டு எழுந்தேன். கருவறைக்கு மேலே நிமிர்ந்து உற்றுப் பார்த்தேன். ஒரே இருட்டு. ஒன்றும் தெரியவில்லை. கீழே குனிந்து நோக்கினேன். அம்மன் சிலைக்கு முன்பு நாங்கள் ஏற்றி வைத்த காமாட்சி விளக்கின் சுடர் அசையாமல் நின்று எரிந்து கொண்டிருந்தது. அம்மனின் மோகனப் புன்னகையும், அபயகரமும் எனக்கு மீண்டும் தைரியத்தை அளித்தன.

என்னவென்று தெரியவில்லையே என்ற குழப்பத்துடன் கீழே அமர்ந்து கலசத்தையும் நூலையும் கையிலெடுத்தேன். சுற்றத் தொடங்கினேன்.

கோவில் பாத்திரப் பண்டங்கள், பூசை சாமான்கள், அன்னதான சமையல் பாத்திரங்கள் ஆகியவற்றைத் திருட வந்திருப்பார்களோ, திருடர்கள் கோவில் மாடத்தில் நடமாடுகிறார்களோ என்றெண்ணி கொண்டு நூலைக் கலசத்தில் சுற்றிக் கொண்டிருந்தேன்.

மன்றத்தில் உள்ள அன்னையின் படம், அடிகளார் படத்தைப் பார்த்துப் பார்த்து என்னுள் தைரியத்தை உண்டாக்கிக்கொண்டேன். அந்தச் சமயத்தில் மீண்டும் பயங்கரமான அந்த ஒலி கேட்டது. மேலே மாடம் இடிவதைப்போல பெரும் சப்தம் கேட்டது.

### உடன் இருப்பவர்களை எழுப்பினேன்

துள்ளிக் குதித்து எழுந்தேன். வேள்விப் பணிகள் செய்யும்போது ஆடவர் யாரும் சட்டை அணிந்து செய்ய மாட்டோம். வெற்றுடம்புடன்தான் வேள்விப்பணிகளை செய்வோம்.

அந்த நடு இரவிலே.. கேரளக் குளிரிலே சட்டை போடாத என் உடம்பு குப்பென்று வியர்த்தது.

தூங்கிக்கொண்டிருந்த சக்தி இராமமூர்த்தியையும் சக்தி மருதராசையும் அவசரமாக எழுப்பினேன். அவர்களும் விழித்துக்கொண்டு குழம்பிய நிலையில் என்ன என்ன என்று கேட்டனர். அவர்களை நான் சத்தம் போட்டு எழுப்பும்போது அந்தப் பயங்கர சப்தம் அடங்கிவிட்டது.

மூன்று முறை மேலே சப்தம் கேட்டதையும், யாரது என்று நான் கேட்டதும், அந்தச் சத்தம் நின்று விட்டதையும் சொன்னேன்.

### கல் எறிந்து விரட்டுவோம்:

சக்தி இராமமூர்த்தி உஷார் ஆனார். வெளியே போய்ப் பார்ப்போம் என்றார். மூவரும் கோயிலைவிட்டு வெளியே வந்தோம். எங்களிடம் எந்த ஆயுதமும் இல்லை. இராமமூர்த்தி சுற்றும் முற்றும் பார்த்து இரண்டு கற்களைக் கையில் எடுத்துக்கொண்டார்.

(தொடர்ச்சி..12ஆம் பக்கம்)

# யாகசாலையின் பெருமை...

“மேல் மண்டபத்தில் ஆண் உருவம் தெரிந்தால் அவனை இக்கல்லால் எறிந்தே வீழ்த்தி விடுகிறேன்”என்றார். விடிந்ததும் வேள்வி செய்வதற்காகக் கோவிலுக்கு முன் பந்தல் போட்டிருந்தார்கள். பக்கத்தில் அன்னதானப் பந்தல் இருந்தது. அங்கெல்லாம் டியூப்லைட்டுகள் ஒளியைக் கொட்டிக்கொண்டிருந்தன. அங்கு யாரும் தென்படவில்லை. கோயிலைச் சுற்றிக்கொண்டு பின்புறமாக மூவரும் வந்து நின்றோம். அங்கு எந்த விளக்கும் இல்லை.

## கன்னங்கரிய எருமைபோல் ஓர் உருவம்:

அம்மனுக்கு மேலே உள்ள மண்டபத்தைப் பார்த்தோம். ஒரே இருட்டு, பழைய கட்டிடம். ஆதனால் ஒரே கறுப்பாகத் தெரிந்தது. கண்ணுக்குத் தெரியாத இருட்டாக இருந்தது.

சக்தி மருதராஜ் தன் கையிலிருந்த சிறிய கல் ஒன்றை மேல் கட்டடத்தை நோக்கி வீசினார்.

“யாரங்கே மேலே..ஏய்.. இறங்கி வா! உன்னைச் சும்மா விட மாட்டேன்”என்று இராமமூர்த்தி கத்தினார். பதில் ஏதும் இல்லை.

மூவரும் மேலேயே பார்த்துக்கொண்டிருந்தோம். அப்போது.. என்ன ஆச்சரியம்..! அந்தக்கட்டிடத்தின் மேலே கறுப்பாக ஒரு உருவம் அசைந்தது. அது மனித உருவம் அல்ல..!

இராமமூர்த்தியின் கையிலிருந்த கற்கள் அந்த உருவத்தை நோக்கிப் பறந்தன.

அந்த உருவம் எது என்று எங்களால் இன்னமும் விளக்கிக்கூற முடியவில்லை. கன்னங்கரிய ஒரு பெரிய எருமையைப்போல அந்த உருவம் காணப்பட்டது. அந்த உருவம் அங்கே வெகுநேரம் நிற்கவில்லை. கட்டிடத்தைவிட்டு மேலே கிளம்பியது. அப்படியே கறுப்பு பிண்டம்போல ஆகாயத்தில் ஊர்ந்து சென்றது. அதற்கு இறக்கைகள் இல்லை. ஆனால் வான் வெளியில் வயற்புறங்கள் இருந்த திசை நோக்கிச் சென்றது. அந்தக் கறுப்பு எருமை உருவம் பேயா? பிசாசா? அல்லது இங்கு இருந்து கொண்டு பலரை வருத்தித் துன்பம் கொடுத்த தீய சக்தியா? எதுவென்று தெரியவில்லை.

## காப்பாற்றியது யார்?

எங்கள் மூவருக்கும் ஒரே வியப்பாக இருந்தது. பயமாகவும் இருந்தது. அந்த உருவம் பற்றி விளக்கிச் சொல்ல எங்கள் மூவருக்கும் முடியவில்லை.
மறுபடியும் கோவிலுக்குள் வந்து வேள்விப் பணிகளைத் தொடங்கினோம்.

இரவு 7.00 மணிக்கு அந்தப் பகுதிக்கு யாரும் வரப் பயப்படுவார்களாம். மன்றத்து மகளிர்கூட இரவு தங்க விரும்பாமல் சென்றுவிட்டனர். கோவிலுக்கு முன்னே உள்ள பாதையில் இரவு 7.00 மணிக்குச் சென்ற பெண்கள் சிலர் தீய சக்தியால் பாதிக்கப்பட்டது உண்டாம்.

அப்படியிருக்க வேள்விப்பணி செய்துகொண்டிருந்த எங்கள் மூவரின் தலைக்கு மேலே தீய சக்தி ஒன்று நின்று கொண்டு ஆட்டம் போட்டும் பயங்கர சப்தம் எழுப்பியும் அந்தத் தீய சக்தியால் எங்கள் மூவரையும் நெருங்க முடியவில்லை. இதற்குக் காரணம் என்ன..?

அம்மாதான் சூட்சுமமாக இருந்து எங்களைக் காப்பாற்றினாள். அங்குள்ள தீய சக்தியை அடையாளம் காட்டினாள். வேள்வி செய்வதன் மூலம் அதனை விரட்டி ஓடச் செய்தோம்.

## சுற்றுப்பூசையும் - பூமி பூசையும்:

நமது வேள்வியில் அமைக்கப்படும் ஒவ்வொரு அமைப்புக்கும் ஒவ்வொரு காரியத்திற்கும் பொருள் உண்டு. ஒவ்வொரு செயலுக்கும் காரணமும் பலனும் உண்டு. அருள்வாக்கில் அன்னை அவ்வப்போது இவற்றை மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் சொல்லியிருக்கிறாள்.

தனிப்பட்ட முறையில், சொந்த விஷயமாக அருள்வாக்கு கேட்டபோதும் வேள்வி பற்றிய சில விளக்கங்களைப் பெற்ற அனுபவமும் எனக்கு உண்டு.

வேள்விப் பணிகளைத் தொடங்குவதற்கு முன்பாக எந்த இடத்தில் வேள்வி செய்கிறோமோ அந்த இடத்தில் சுற்றுப்பூஜை செய்கிறோம். அந்தப் பூஜை முடிகின்ற வரை ஓம் சக்தி! பராசக்தி! என அன்னையின் நாமத்தைச் சொல்லி அவளைத் துணைக்கு வரும்படி அழைத்து, அந்த இடத்தைச் சுற்றி மஞ்சள் நீர் தெளித்து, பூசணிக்காய், எலுமிச்சம்பழம் திருஷ்டி கழிக்கிறோம். அந்த இடத்ததைச் சுற்று பூஜை மூலம் சுத்தப்படுத்துகிறோம். அதன்மூலம் அங்குள்ள தீய சக்திகள் விரட்டப்படுகின்றன. அந்த எல்லைக்குள் எந்தத் தீய சக்தியும் வர முடியாது.
யாகசாலையில் பூமியில் யாக குண்டம் அமைக்கும் இடத்திலும் சக்கரங்கள் அமைக்கும் இடத்திலும் எந்தத் தீய சக்தியும் நடமாட முடியாது.

இந்தச் சுற்று பூஜையும் பூமி பூஜையும் நாங்கள் செய்ததால் அன்னை ஆதிபராசக்தி எங்கள் மூவரையுமு் அன்று காப்பாற்றினாள்.
அது மட்டுமல்ல.. அந்தத் தீய சக்தியை நாங்கள் தேடிப் போனபோது.. ‘இவர்கள் சக்தியின் மக்கள்!’என்றுணர்ந்து எங்களுக்குத் துன்பம் செய்யாமல் விட்டதோடு அந்த இடத்தைவிட்டு அகன்று ஓடியது.

## மறுநாள் நடந்த வேள்விப்பூசை:

அன்று இரவு முழுவதும் தொடர்ந்து வேள்விப்பணி செய்தோம். மறுநாள் காலை 6.00 மணிக்கு மன்றத் தொண்டர்கள், மகளிர்கள் வரத் தொடங்கினார்கள். எல்லோரும் சேர்ந்து பணிகளைச் செய்து கொண்டிருந்தோம்.

(தொடர்ச்சி..13ஆம் பக்கம்)

# Melbourne - Mandrams – Upcoming Events – April 2017

**Athiparasakthi Mandram Melbourne Australia (AMMA)**
Contact: +61 451 374 878, +61 433 326 620

contactus@supremesakthi.com
**www.supremesakthi.com**

**Joint Prayers:** Every 3rd Sunday of the month
**Thiruvilakku Poojai:** Every month on the Sunday following the Full Moon day

**Southern Community Centre,**
Rupert Drive - Mulgrave 3170 (Mel.Ref:: 80 F 5)

| | | | |
|---|---|---|---|
| 16.04.2017 | Sunday | 09.00a.m.<br>06.10p.m. | Guru, Vinayagar, Annai Pooja, Chakkaram drawing<br>**"Thiru Vilakku Pooja"**<br>**"திருவிளக்குப் பூஜை"** |

## யாகசாலையின் பெருமை...

காலை சுமார் 7.00 மணியிருக்கும். இடியும் மின்னலும் முழங்கக் கொட்டோ கொட்டென்று மழை கொட்டியது. கோவிலுக்கு முன்பாக போடப்பட்டிருந்த வேள்விப் பந்தலில் அங்கங்கே மழை நீர் மிகுதியாக ஒழுகத் தொடங்கியது. முதல்நாள் இரவு கட்டப்பட்ட யாக குண்டத்திலும் மழை நீர் சொட்டத் துவங்கியது.
உடனே அங்கிருந்த மடக்கு நாற்காலிகள் நான்கை வேள்விக் குண்டத்தைச் சுற்றிப் போடச் செய்தேன். அவற்றின் மேலே ஆஸ்பெஸ்டஸ் தகடுகள் இரண்டைப் போட்டு யாக குண்டத்தை மூடச் சொன்னேன்.

அவ்வாறு செய்து முடித்ததும் அம்மா படத்தின் முன் சென்று "தாயே! யாக குண்டம் மழை நீரால் கரைந்து விடாமல் காக்க வேண்டும். கேரள மாநிலத்தில் முதன்முதல் செய்யப்படும் இந்த வேள்வியை நல்லபடியாக முடித்துக் கொடுக்க வேண்டும். தயவு காட்டு!" என்று வேண்டிக்கொண்டேன்.

பெருமழை பெய்து யாக சாலையில் தண்ணீர் புரண்டோடியது. ஆனால், யாக குண்டத்திற்கு அருகில் மழை நீர் வந்து கரைக்காமல் தள்ளிச் சென்றது. பந்தலை மீறி ஒழுகுகிற தண்ணீரை யாக குண்டத்தின்மேல் கவிழ்க்கப்பட்ட ஆஸ்பெஸ்டஸ் தகடு தடுத்தது. அம்மா அருளால் யாக குண்டத்துக்கு எந்தச் சேதமும் ஏற்படவில்லை.

### அன்னைக்கு அபிடேகம்:

இரண்டு மணி நேரம் பெய்த பிறகு மழை நின்று லேசாக தூறல் மட்டு விழுந்து கொண்டிருந்தது.
வேள்விச்சாலையில் நடுக்கோடு, அறுகோணச்சக்கரம் ஆணியடித்து நூலால் கட்டியிருந்தேன். அவ்வளவு பெரிய மழை பெய்துங்கூட நடுக்கோடோ, சக்கரமோசிறிதும் மாறுபடவில்லை.

மழை நீர் நின்றதும் பக்தர்களும் தொண்டர்களும் கூட்டமாகக் கூடிவிட்டனர். காலை 9.00 மணிக்குக் கலசங்களைப் பிரதிஷ்டை செய்து அன்னையை வேண்டி முறைப்படி வேள்வியைச் செய்து முடித்தோம். அடுத்து அன்னைக்கு கலசத் தீர்த்தம் கொண்டு அபிடேகம் செய்ய வேண்டும்.

எல்லாக்கலசங்களும் திருஷ்டிக் கனி பிழியச் செய்து அவரவர்களிடம் கலசத்தை எடுத்துக் கொடுத்தேன். கலசங்களைக் கையில் ஏந்தியபடி சக்திகள் யாக சாலையைச் சுற்றிப் பயபக்தியுடன் நின்றார்கள்.

அன்னையையும், யாக சாலையையும் அவர்கள் மும்முறை வலம்படி நான் சொல்லவிழைந்தபோது தான்.. அனைவரும் திடுக்கிட்டுத் திரும்பும் அந்த நிகழ்ச்சி நடந்தது.

### அவலக்குரல் எழுப்பியவாறு ஓடி வந்த சிறுவன்:

அந்தக் கோவிலுக்கு முன்னே பரந்த வயல்வெளி. அங்கு வெகு தூரத்தில் வயல் வரப்பின்மீது ஒரு சிறுவன் "ஐயோ! ஐயோ! அம்மா!" என்று அலறிக்கொண்டு கோயிலை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தான். கலசத்தை ஏந்தி நின்ற மகளிர் அந்த அவலக் குரலைக் கேட்டதும் செய்வதறியாது அப்படியே நின்றனர்.

### வித்தியாசமான ஓட்டம்:

யாக சாலையிலிருந்து சுமார் அரை பர்லாங் தூரத்திலிருந்து அந்த ஆள் "ஐயோ! அம்மா! ஐயோ!" என்ற அவலக்குரலை நிறுத்தாது யாக சாலையை நோக்கி வேகமாக ஓடி வந்தான். அந்த வேகத்திலும் இரு கைகளையும் தன் உடலையும் சுற்றி வேகமாக ஆட்டிக்கொண்டு ஓடி வந்தான்.

யாக சாலையில் நின்றிருந்த கூட்டத்தினர்க்கு இவன் ஏன் இப்படி வித்தியாசமாக ஓடி வருகிறான்? என்பது புரியவில்லை.
(தொடர்ச்சி..15ஆம் பக்கம்)

# Melbourne - Mandrams – Upcoming Events – April 2017



## Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram



**Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.**

**Vermont South Community House,**
Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| **07.04.2017** | **FRIDAY - வெள்ளி** | 7.30p.m. – 9.30p.m. | **கூட்டு வழிபாடு-Joint Prayer** |
| **10.04.2017** | **MONDAY– திங்கள்** | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>**“பௌர்ணமி விளக்குப் பூஜை”** |
| **14.04.2017** | **FRIDAY - வெள்ளி** | 7.30p.m. – 9.30p.m. | **கூட்டு வழிபாடு-Joint Prayer** |
| **21.04.2017** | **FRIDAY – வெள்ளி** | 7.30p.m. – 9.30p.m. | **கூட்டு வழிபாடு-Joint Prayer** |
| **28.04.2017** | **FRIDAY – வெள்ளி** | 7.30p.m. – 9.30p.m. | **கூட்டு வழிபாடு-Joint Prayer** |

## Lalor

**Join Prayers: Alternatie Sundays 4.00p.m. – 6.00p.m.**

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

| | | | |
|---|---|---|---|
| **02.04.2017** | **SUNDAY – ஞாயிறு** | 4.00p.m. – 6.00p.m. | **கூட்டு வழிபாடு-Joint Prayer** |
| **16.04.2017** | **SUNDAY – ஞாயிறு** | 4.00p.m. – 6.00p.m. | **கூட்டு வழிபாடு-Joint Prayer** |
| **30.04.2017** | **SUNDAY – ஞாயிறு** | 4.00p.m. – 6.00p.m. | **கூட்டு வழிபாடு-Joint Prayer** |



# திருமதி அம்மா பதில்கள்

**- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்**

தூய்மையான இல்லற வாழ்க்கை, தெய்வீகமான ஆன்மிக வாழ்க்கை எது புனிதமானது?

தூய்மையான இல்லற வாழ்க்கை, தெய்வீகமான ஆன்மிக வாழ்க்கை என்று எழுதியிருக்கிறீர்கள். இல்லறம், துறவறம் என்று ஒப்பிட்டுக் கேட்டிருக்கலாம். ஆன்மிக வாழ்க்கை என்று கேட்டிருப்பதால், ஆன்மிக உணர்வு இல்லறத்திலும் உண்டு. இல்லறத்தில் வாழ்வதால் பிறருக்காகத் தன்னையே அர்ப்பணிக்கும் வாய்ப்பு உண்டு. தெய்வீகமான ஆன்மிக வாழ்க்கை என்று துறவறத்தை எடுத்துக் கொண்டால் எல்லாவற்றையும் துறந்து செல்லுகின்ற வாய்ப்பு உண்டு. தன்னுடைய நன்மைக்காக, உலக வாழ்க்கையைத் துறக்கும் துறவறத்தைவிட, எத்தனை துன்பங்கள் வந்தாலும் அவற்றையெல்லாம் தாங்கிக்கொண்டு பிறருக்காக வாழும் தூய்மையான இல்லற வாழ்க்கையே புனிதமானது.

அதனால்தான் வள்ளுவர்,

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்”

என்று கூறியுள்ளார். ஆகவே தூய்மையான இல்லறமே சிறந்தது.

# யாகசாலையின் பெருமை...

## கருப்பான புகை மூட்டம்:

அவன் அருகில் வர வர எல்லோரும் ஆச்சரியப்படும் வகையில் ஒரு அதிசயக் காட்சி தென்பட்டது. ஆம்! அவனைச் சுற்றிக் கருப்பான புகை மூட்டம் போல் ஒன்று தெரிந்தது. அவன் ஓடிவர ஓடிவர அப்புகை மூட்டம் போல் ஒன்று தெரிந்தது. அவன் ஓடிவர ஓடிவர அப்புகை மூட்டமும் அவனைச் சுற்றிக்கொண்டே உடன் வந்தது. கைகளை ஆட்டிக்கொண்டு தலையை நாலாபுறமும் வேகமாக அசைத்துக்கொண்டு ஐயோ! ஐயோ! என்ற அலறலுடன் அவன் ஓடி வந்தது பரிதாபமாக இருந்தது.

## விஷம் கொட்டும் மலைத் தேனீக்கள்:

வேகமாக ஓடி வந்து, வரப்பிலிருந்து கோவில் மேட்டின்மீது ஏறினான். அவன் அலறல் சிறிதும் குறையாமல் ஓடிவந்து யாக சாலையைச் சுற்றி நின்று கொண்டிருக்கும் பக்தர்கள், செவ்வாடைத் தொண்டர்கள் ஆகியோரை விலக்கிக்கொண்டு யாக சாலையில் உள்ளே புகுந்தான்.

இப்போதுதான் எல்லோராலும் அவனை நன்கு பார்க்க முடிந்தது. அவன் பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன். அவனைச் சூழ்ந்தபடி உடன் வருவது புகை மூட்டமல்ல! மலைத் தேனீக்களின் கூட்டம்! ஆயிரக்கணக்கான மலைத் தேனீக்களின் கூட்டம் புகை மூட்டம்போல அவனைச் சூழ்ந்துகொண்டு கொடுக்குகளால் கொட்டியிருந்தன. கைகள், கால்கள், முகம், காதுகள் என உடம்பு முழுதும் மாறி மாறிக் கொட்டியிருந்தன. அரை பர்லாங் தூரம் அவன் ஓடி வந்தும் கூட விஷம் கொட்டும் அந்த மலைத் தேனீக்கள் அவனை விடவில்லை.

## குழப்பமும் போராட்டமும்

பயங்கர அலறலுடன் யாக சாலையின் உள்ளே நுழைந்த அந்தச் சிறுவன் ஓரிடத்திலும் நிற்கவில்லை. அங்குமிங்கும் ஓடித் தேனீக்களின் முற்றுகையிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள போராடினான். கலசங்களை ஏந்தி வட்டமாக நின்ற சக்தியர் யாக சாலையில் விஷத் தேனீக்களின் கூட்டத்தைக் கண்டு கலைந்துவிட்டனர்.

“கலசத்தைவிட்டு விடாதீர்கள்! கீழே போட்டுவிடாதீர்கள்!” என்று கத்தினேன். அவர்களையெல்லாம் ஒரு பக்கமாக நிற்கச் செய்தேன்.

பக்தர்களின் கூட்டத்திற்கிடையே தேனீக்கள் பறந்தன. கூட்டம் மிரண்டு அங்கும் இங்கும் கலைந்து ஓடியது. சற்று நேரத்திற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஒருவர் துணியால் அவனைச் சூழ்ந்து பறந்த தேனீக்களை விரட்டினார். ஒருவர் குடை விரித்துத் தேனீக்கள் மீது வீசினார். அகன்ற ஓலைத் தடுக்கு ஒன்று எடுத்து ஒருவர் அந்தத் தேனீக்களை விரட்டினார். ஆனாலும் அந்தத் தேனீக்கள் அந்தப் பையனை விட்டு அகலவில்லை. வேறு யாரையும் அவை கொட்டவில்லை. அவனையே மாறி மாறிக் கொட்டின. பையன் துடிதுடித்தான். இவ்வாறு ஒரே குழப்பமாகவும், தேனீக்கள் ஓட்டுவதிலும் பெரும் போராட்டமாகவும் இருந்தது.

## குப்பென்று பற்றிய யாக குண்டம்:

அன்னைக்கு நல்லபடியாக அபிடேகம் நடக்க வேண்டுமே என்ற கவலையுடன் என்ன செய்வது என்றே தெரியாமல் நான் நின்றேன். யாகசாலையில் அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருந்த பையன் யாக குண்டத்தின் அருகிலே வந்தான். வேள்வியின் இறுதிக்கட்டமாக 108 மந்திரம் முடித்து திருஷ்டி கழித்த பிறகு யாக குண்டத்திலே அக்கினி அடங்கிவிட்டது. ஆனால் சிறிதாகப் புகை வந்துகொண்டிருந்தது.

அந்தப் பையன் யாக குண்டத்தின் அருகில் வந்ததும் அதுவரை புகைந்து கொண்டிருந்த யாக குண்டம் திடீரென குபீரெனப் பற்றிக்கொண்டு நீண்ட ஜுவாலையுடன் எரிந்தது. யாக குண்ட ஜுவாலை பட்டவுடன் பையனைச் சூழ்ந்திருந்த தேனீக்கள் யாவும் அவனை விட்ட விலகின. இதையறியாத அந்தப் பையன் அன்னையின் படம் இருக்கும் பக்கமாக ஓடி வந்தான்.

நான் அவனைப் பிடித்து யாக குண்டத்திற்கு அருகில் அமர வைத்தேன். ஜுவாலையின் அலை பட்டதும் எல்லாத் தேனீக்களும் விர்!விர் என்று வயலை நோக்கிப் பறந்து சென்றன.

## பையன் பிழைப்பானா?

பையன் யாக குண்டத்திற்கு அருகில் மயங்கி விழுந்தான். அவனை எழுப்பிக் கோவிலின் உள்ளே கொண்டு போய்ப் படுக்க வைத்தேன். பையன் உடம்பும் முகம் சிவந்து தடித்துவிட்டது. காதுகள் செக்கச் செவேல் என வீங்கி மடிந்தன. அவன் பிழைப்பானா? என்று கூட்டத்தில் தங்களுக்குள் பேசிக்கொண்டனர்.

## தீர்த்தம் கொடுக்க தெளிவு:

சில சக்தியர் அவனைக் கவனிக்க கோவிலுக்குள் சென்றனர். உடனே கலசங்களை முறையாக நிற்க வைத்து அன்னைக்கு அபிடேகம் செய்தேன். எதிர்பாராத விதமாக அபிடேகத்துக்குக் காலதாமதம் ஏற்பட்டதையெண்ணி அன்னையிடம் மன்னிப்பு கோரினேன்.

அன்னையை வேண்டிக்கொண்டு கலசச் செம்பு வேள்வித் தீர்த்தம் எடுத்துக்கொண்டு கோவிலுக்குள் சென்றேன். பையன் மிகவும் களைப்பாக படுத்திருந்தான்.

ஓம் சக்தி! பராசக்தி! என்று சொல்லி அவன் உடல் முழுவதும் கலசத் தீர்த்தத்தை தடவினேன். ஒரு டம்ளரில் ஊற்றித் தந்து அவனைக் குடிக்க வைத்தோம். பையன் ஓரளவு தெளிவடைந்தான்.
அவன் உடம்பெல்லாம் தேனீக் கொடுக்குகள் கறுப்பு முட்டைகளைப்போல தெரிந்தன.

## உதவ முடியவில்லையே..

அன்று நடைபெற்ற வேள்வியால் தேனீக்களால் துன்பப்பட்ட அந்தப் பையனின் அத்தை கலசத்திற்கு அர்ச்சனை செய்தார்கள்.

தேனீக்கள் துரட்டப்பட்டுப் பையன் யாக சாலையுள் நுழையும்போது அவர் கலசத்தை ஏந்தியபடி நின்றிருந்ததால் பையன் வலியால் துடிக்கும்போது தான் எந்த உதவியும் செய்ய முடியவில்லையே என வருந்தினார். அபிடேகம் முடிந்ததும், தீர்த்தம் கொடுத்து ஆசுவாசப்படுத்தினோம். அவன் அத்தை அவனை டாக்டரிடம் அழைத்துச் சென்றார்.

(தொடர்ச்சி..16ஆம் பக்கம்)

## யாகசாலையின் பெருமை...

### டாக்டர் சொன்னவை:

“நல்ல வேளை! பையனுக்கு ஒரு தீங்கும் இல்லை. மருந்து மாத்திரை எதுவும் தேவையில்லை” எனக் கூறிவிட்டு உடலில் இருந்த தேனீக்களின் கொடுக்குகளையெல்லாம் சாமணத்தால் பறித்து எடுத்துவிட்டார் எனச் செய்தி வந்தது.

### நெருப்பென நின்றாள்..

ஆபத்தான நிலையில் தேனீக்களால் சூழப்பட்டு அந்தப் பையன் யாக சாலைக்கு ஓடி வந்தான். என்னென்னவோ உபாயங்களைக் கையாண்டும் தேனீக்களை ஓட்ட முடியவில்லை.

யாக குண்டத்தின் ஜுவாலை வெப்பம் எழுந்த உடனே தேனீக்கள் பறந்து மறைந்தன. நெருப்பைக் கண்டால் தேனீக்கள் பறந்து விலகி ஓடுவது இயல்புதான். ஆனால் இருபது நிமிடமாக எரியாமல் புகைந்து கொண்டிருந்த யாக குண்டம், தேனீக்களுடன் அந்தப் பையன் அருகில் வந்த அந்த நேரத்தில் பெட்ரோல் ஊற்றியதும் குப்பெனப் பற்றி எரிவதுபோலப் பற்றி எரிந்ததே அது எப்படி?

அந்தப் பையன் யாக சாலையில் அடியெடுத்து வைத்துவிட்டான் அல்லவா? அது அவனுக்குக் கிடைத்த புண்ணியம். அவனைத் தேனீக்களிடமிருந்து காப்பாற்ற வேண்டும் என்பது அன்னையின் திருவுள்ளம். ஆதலால் நெருப்பென நின்றாள்! குப்பென ஜுவாலை எரிந்தது.

### யாக சாலையின் பெருமை:

கேரளத்தில் தேனீக்கள் பெரிய அளவில் காணப்படுகின்றன. ஒரு தேனீ கொட்டினாலும் அதிகத் துன்பப்படுகின்றனர். ஆயிரக்கணக்கான தேனீக்கள் கொட்டியும் அந்தப் பையன் உயிருக்கு ஆபத்து இன்றித் தப்பினானே அது எப்படி?

**வேள்வியில் வைக்கப்பட்ட அந்தக் கலசத் தீர்த்தம் விஷத்தை முறித்து விட்டது என்பது அந்த டாக்டர்கள் சொன்னதிலிருந்து தெரிந்தது.**

**அவன் யாக சாலைக்குள் ஓடி வந்து விழாமால் எங்கோ விழுந்திருப்பானேயானால், தேனீக்கள் விலகி ஓடி இருக்குமா..? உயிர் போகும் வரை கொட்டிக் கொட்டி அவனைக் கொன்று போட்டிருக்கும்.**

**உயிர் போகும் ஆபத்து வந்த நிலையில் அவன் யாக சாலையில் வந்து விழுந்ததால் உயிர் பிழைத்தான்.**

**அவனை அந்த யாக சாலை காப்பாற்றியது.**

**யாக சாலையின் பெருமையை உணர வைத்த நிகழ்ச்சி அது!**

ஓம் சக்தி!

## காட்சியும் கொடுப்பாள், கழற்றியும் விடுவாள்

நம் சித்தர் பீடத்துப் புலவர்களில் ஒருவர் மு.சுந்தரேசன், செய்யாறு அரசுக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்து வந்தவர்.

ஒருநாள் காலை வீட்டிலிருந்து மருவத்தூருக்குப் புறப்பட ஆயத்தமானார். அம்மாவைப் பற்றி மனைவியோடு பேசிக்கொண்டிருந்தார். நம் அம்மா அவருக்குக் காட்சி கொடுத்தது? இவருக்குக் காட்சி கொடுத்தது? இத்தனை வருடமாக நாமும்தான் அம்மா கோயிலுக்குப் போகிறோம். உம்! நமக்கு எங்கே அம்மா காட்சி கொடுக்கிறது! என்று சொல்லி அங்கலாய்த்துக்கொண்டார்.

அவர் மனைவி, “அம்மா நமக்குக் காட்சியும் கொடுக்க வேண்டாம், நம்மைக் கழற்றியும் விட வேண்டாம், அவருக்குக் காட்சி கொடுத்தது அவர் வருகிறாரா! இவருக்குக் காட்சி கொடுத்தாள் இவர் வருகிறாரா? அம்மா காட்சி கிடைத்த சிலர் அம்மாவிடம் கடைசி வரை வருகிறார்களா பாருங்கள்!

“அம்மா கடைசி வரை நம்மை அவளிடம் வைத்திருந்தால் போதும். அவள் காட்சியும் கொடுக்க வேண்டாம், கழற்றியும் விட வேண்டாம்”என்றார்.

சரி! பஸ்ஸுக்கு நேரமாகிறது! வருகிறேன் என்று காலை 7.00 மணிக்குப் புறப்பட்டு 9.00 மணிக்கு மருவத்தூர் வந்து சேர்ந்தார் புலவர்.

அன்று காலை 9.30 மணி அளவில் அருள்திரு அடிகளார் அவர்கள் சித்தர் பீடத்திற்கு வந்தார்கள். அவரைத் தொடர்ந்து ஆலயப் புலவர் சுந்தரேசனும் பின்னாலே அருட்கூடம் சென்றார். அடிகளார் உடைகளை மாற்றிக் கொண்டு, செவ்வாடை அணிந்து கொண்டு புறப்பட்டவர், வாயிலில் நின்றிருந்த புலவரைப் பார்த்து என்ன விசேஷம்? என்று கேட்டார். ஒன்றுமில்லையம்மா.. என்றார் புலவர்.

“அம்மா காட்சியும் கொடுக்கும், கழற்றியும் விட்டுடும் இல்லே..”என்று கேட்டபடி எந்த பதிலையும் எதிர் பார்க்காமல் ஒரு புன்சிரிப்பை உதிர்த்துவிட்டு விடுவிடுவென குளியலறைக்குப் புறப்பட்டுப் போய்விட்டார் அடிகளார்.

இன்று காலையில் 7.00 மணிக்கு மனைவி பேசிய பேச்சை 9.30 மணிக்கு அடிகளார் விசாரிக்கிறாரே.. எப்படி முடிகிறது? என்றெண்ணி வியப்போடு நின்றார் புலவர் சுந்தரேசன்.
ஓம் சக்தி!

குருவடி சரணம்! திருவடி சரணம்!!



ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!

## ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்

### ஆலய சிறப்பு விழாக்கள்

### 2017 - ஸ்ரீ துர்முகி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| பங்குனி | 28 | 10.04.2017 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |

### 2017 - ஸ்ரீ ஹேவிளம்பி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| சித்திரை | 01 | 14.04.2017 | வெள்ளி | தமிழ்ப் புத்தாண்டு |
| சித்திரை | 13 | 26.04.2017 | புதன் | அமாவாசை - வேள்வி |
| சித்திரை | 27 | 10.05.2017 | புதன் | சித்திரைப் பௌர்ணமி - வேள்வி பெருவிழா |
| வைகாசி | 11 | 25.05.2017 | வெள்ளி | அமாவாசை - வேள்வி |
| வைகாசி | 26 | 09.06.2017 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆனி | 09 | 23.06.2017 | வெள்ளி | அமாவாசை - வேள்வி |
| ஆனி | 24 | 08.07.2017 | சனி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆடி | 07 | 23.07.2017 | ஞாயிறு | அமாவாசை - வேள்வி |
| ஆடி | 10 | 26.07.2017 | புதன் | சித்தர் பீடத்தில் 46ஆவது ஆடிப்பூர விழா |
| ஆடி | 11 | 27.07.2017 | வியாழன் | சித்தர் பீடத்தில் 46ஆவது ஆடிப்பூர விழா |
| ஆடி | 22 | 07.08.2017 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆவணி | 05 | 21.08.2017 | திங்கள் | அமாவாசை - வேள்வி |
| ஆவணி | 20 | 05.09.2017 | செவ்வாய் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| புரட்டாசி | 03 | 19.09.2017 | செவ்வாய் | அமாவாசை - வேள்வி |
| புரட்டாசி | 04 | 20.09.2017 | புதன் | சித்தர் பீடத்தில் நவராத்திரி பெருவிழா ஆரம்பம் |
| புரட்டாசி | 19 | 05.10.2017 | வியாழன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஐப்பசி | 02 | 19.10.2017 | வியாழன் | அமாவாசை - வேள்வி |
| ஐப்பசி | 17 | 03.11.2017 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| கார்த்திகை | 02 | 18.11.2017 | சனி | அமாவாசை - வேள்வி |
| கார்த்திகை | 17 | 03.12.2017 | ஞாயிறு | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| மார்கழி | 02 | 17.12.2017 | ஞாயிறு | அமாவாசை - வேள்வி |
| மார்கழி | 10 | 25.12.2017 | திங்கள் | கிறிஸ்மஸ் |

## ‘ஓம் சக்தி’ என்ற மனைவியின் வழிபாடு ‘ஓமன்’ நாட்டில் கணவனின் உயிர் காத்தது

அன்னையின் திருவருள் பொங்கி வழியும் மன்றங்களுள் ஈரோடு மூலப்பட்டறை மன்றமும் ஒன்று. அந்த மன்றத்தில் உள்ள சக்தி சச்சிதானந்தமும் அவர் துணைவியாரும் அன்னையை இறுகப் பற்றிக்கொண்ட பக்தர்கள். அன்னையிடம் உங்களுக்கு இவ்வளவு ஈடுபாடு வருவதற்கு என்ன காரணம்? என்ற கேள்வி ஒன்றைத் தொடுத்தோம். சக்தி சச்சிதானந்தம் அவர்களின் துணைவியார், ஆனந்த கண்ணீர் மல்க தங்கள் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளைச் சொன்னார். “என் கணவர் வேலை நிமித்தமாக ‘ஓமன்’ என்ற அரபு நாட்டில் பணிக்குச் சென்றிருந்தார். ‘Sound General Engineering Company’ என்பது அதன் பெயர். அங்கே தான் வேலை செய்துகொண்டிருந்தார். வெளிநாட்டில் இருந்தாலும் செவ்வாடை உடுத்தி நாள்தோறும் 108, 1008 மந்திரம் படித்து வழிபாடு செய்யத் தவறுவது இல்லை. தினந்தோறும் அவரை அழைத்துச் செல்வதற்காக கம்பெனியிலிருந்து வீட்டிற்கு கார் வரும்.

கார் வருவதற்குள் இவர் தயாராகிவிடுவார். ஒருமுறை இவரையழைத்துச் செல்வதற்காக வந்த அந்தக் கம்பெனியின் கார் வீட்டின் முன் நிற்காமல் புறப்பட்டுச் சென்றுவிட்டது. ‘ஏன் இன்றைக்கு நிறுத்தி ஏற்றிக் கொள்ளாமல் போகிறான்?’ என்று நினைத்து நினைத்து ஆத்திரம் வந்தது. கோபம் வந்தது. உரிய நேரத்தில் வேலைக்குச் செல்ல வேண்டுமே? என்ற பதற்றமும் ஏற்பட்டது. குறித்த நேரத்திற்குள் சென்றாக வேண்டுமே என நினைத்து வாடகைக்கார் பிடித்து கம்பெனிக்குப் புறப்பட்டார். வழி எல்லாம் அதே சிந்தனை! எதற்காக அவன் வண்டியை நிறுத்தாமல் போயிருக்கிறான்... சட்டென்று வாடகைக்காரர் நின்றது. வெளியே எட்டி பார்த்தபோது அவர் கண்ட காட்சி குலை நடுங்க வைத்தது! எந்தக் கார் நிற்காமல் வந்ததோ அந்தக் கார் இப்போது விபத்துக்குள்ளாகி சுக்கு நூறாக நொறுங்கிக் கிடந்தது. அந்த வண்டியில் வந்திருந்தால் நம் கதி.. நம்மை காப்பாற்றவே அன்னை இந்த வண்டியிலேறி வராதபடித் தடைபோட்டு விட்டாள் என்று சக்தி சச்சிதானந்தம் மகிழ்ந்தார். அன்று எனது மாங்கல்யம் பறிபோயிருக்க வேண்டும். அது நடவாதபடி காப்பாற்றினாளே அன்னை. அந்தக் கருணைக்கு அடிமைப்பட்டுப் போனேன் சக்தி!” என்றார் அவர் துணைவியார்.

- அன்னையின் அருள்வாக்கு

# ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

## 2017

| | | | | |
|---|---|---|---|---|
| 02.04.2017 | ஞாயிறு | பங்குனி | 20 | ஷஷ்டி விரதம் |
| 05.04.2017 | வியாழன் | பங்குனி | 22 | ஸ்ரீராமநவமி |
| 07.04.2017 | வெள்ளி | பங்குனி | 24 | ஏகாதசி விரதம் |
| 08.04.2017 | சனி | பங்குனி | 25 | சனிப்பிரதோஷ விரதம்<br>இரதோற்சவம் - ஸ்ரீசிவா – விஷ்ணு ஆலயம் - மெல்போர்ண் |
| 09.04.2017 | ஞாயிறு | பங்குனி | 26 | பங்குனி உத்தரம் |
| 10.04.2017 | செவ்வாய் | பங்குனி | 28 | **பூரணை விரதம் - பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்<br>--------------------------------------------------------------------------------<br>ஸ்ரீசிவா திருக்கல்யாணம்<br>ஸ்ரீசிவா – விஷ்ணு ஆலயம் - மெல்போர்ண் |
| 14.04.2017 | வெள்ளி | சித்திரை | 01 | **ஹேவிளம்பி வருடம் - தமிழ் சித்திரை வருடப்பிறப்பு** |
| 15.04.2017 | சனி | சித்திரை | 02 | சங்கட சதுர்த்தி |
| 16.04.2017 | ஞாயிறு | சித்திரை | 03 | **திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மன்றம் மெல்போர்ண் அவுஸ்திரேலியா (AMMA) |
| 21.04.2017 | வெள்ளி | சித்திரை | 08 | கொடியேற்றம் - வக்ரதுண்ட விநாயகர் ஆலயம் - பேசின் |
| 23.04.2017 | ஞாயிறு | சித்திரை | 10 | ஏகாதசி விரதம் |
| 24.04.2017 | திங்கள் | சித்திரை | 11 | பிரதோஷ விரதம் |
| 25.04.2017 | செவ்வாய் | சித்திரை | 12 | **அமாவாசை வேளவி – லே்மருவத்தூர்** |
| 26.04.2017 | புதன் | சித்திரை | 13 | அமாவாசை விரதம் |
| 28.04.2017 | வெள்ளி | சித்திரை | 15 | கார்த்திகை விரதம் |
| 29.04.2017 | சனி | சித்திரை | 16 | சதுர்த்தி விரதம் - அஷ்யதிருதியை<br>தேர் - வக்ரதுண்ட விநாயகர் ஆலயம் - பேசின் - மெல்போர்ண் |
| 01.05.2017 | திங்கள் | சித்திரை | 18 | ஷஷ்டி விரதம் |
| 06.05.2017 | சனி | சித்திரை | 23 | ஏகாதசி விரதம் |
| 10.05.2017 | புதன் | சித்திரை | 27 | **சித்திரை பௌர்ணமி விரதம்** |
| 25.05.2017 | வெள்ளி | வைகாசி | 11 | அமாவாசை விரதம் - அமாவாசை வேள்வி – லே்மருவத்தூர் |
| 26.07.2017 | புதன் | ஆடி | 10 | சித்தர் பீடத்தில் 46ஆவது ஆடிப்பூர விழா |

**புதிய வடிவில், வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்**

**ஆன்மிக விடைதேடும்**
**அதிக பக்தர்களின் மனதைக்கவர்ந்த**

**www.adhiparasakthi.co.uk ஆதிபராசக்தி இணையத்தளம்**

**“ஜோதி” ஆன்மிகச் செய்திச் சுடரை www.adhiparasakthi.co.uk என்ற இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.**

ஜோதி
ஆன்மிகச் செய்திச்சுடர்